# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2016.11.25 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# *அபிவிருத்தி (விசேட ஏற்பாடுகள்)*

**இலங்கையின் துரிதப்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தி உட்பட, எல்லா விடயங்களினதும் மீதான தேசியக் கொள்கையொன்று வகுத்தமைக்கப்படுவதனை வசதிப்படுத்துவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*பிரதம அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 33.00** **தபாற் செலவு : ரூபா 25.00**

ச.வ.-ஓ. 41/2016

**இலங்கையின் துரிதப்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தி உட்பட, எல்லா விடயங்களினதும் மீதான தேசியக் கொள்கையொன்று வகுத்தமைக்கப்படுவதனை வசதிப்படுத்துவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*இச்சட்டத்தின் சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும், கால எல்லையும்.*

**1.** (1) இச்சட்டம், 2016ஆம் ஆண்டின் ஆம் இலக்க, அபிவிருத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், (இதனகத்துப்பின்னர் ''நியமிக்கப்பட்ட தேதி'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் பாகங்கள் II, III, IV, V, VI, VII, VIII மற்றும் IX என்பவற்றின் ஏற்பாடுகள், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், நடைமுறையிலிருக்கையில் மேலேயுள்ள பாகங்களின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட எதுவும், மேலேயுள்ள பாகங்களின் ஏற்பாடுகள் நடைமுறையற்றனவாக வருகின்றமை எவ்வாறிருப்பினும், தொடர்ந்தும் செல்லுபடியுள்ளதாதல் வேண்டும்.

(3) அமைச்சர், (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பாகங்கள் நடைமுறையிலில்லாதொழிவதற்கு முன்னர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின் அப்பாகங்களுள் எவற்றினாலும் அல்லது எவற்றின்கீழும் தாபிக்கப்பட்ட ஏதேனும் முகவர்நிலையம், சபை அல்லது வேறு

2-PL 004900-450 (2016/11)

நிறுவனத்தின் ஆதனம், பணியாட்டொகுதியினர், ஒப்பந்தங்கள், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் அவற்றினால் அல்லது அவற்றுக்கெதிராகத் தொடுக்கப்பட்ட சட்ட வழக்குநடவடிக்கைகள் என்பன, ஓர் அரசாங்கத் திணைக்களத்துக்கு அல்லது நியதிச் சட்டமுறையான கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றப்படுவதற்கான ஏற்பாட்டைச் செய்தல் வேண்டும்.

## பாகம் I

### அத்தியாயம் 1

### கொள்கை அபிவிருத்தி

*கொள்கை அபிவிருத்தி அலுவலகமொன்றைத் தாபித்தல்.*

**2.** (1) அமைச்சருக்கு உதவுவதற்குக் கொள்கை அபிவிருத்தி அலுவலகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) கொள்கை அபிவிருத்தி அலுவலகம், அமைச்சரினால் கோரப்படுவதன்மேல், அலுவலகத்தின்கீழ் பணியாற்றுகின்ற நிபுணத்துவக் குழுவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன்,-

(அ) கொள்கை அபிவிருத்தி;

(ஆ) கொள்கைப் பரிசீலனை; அத்துடன்

(இ) வளக் குறித்தொதுக்குகை,

என்பனபற்றிய அறிக்கையைத் தயாரித்து அதனை அமைச்சரிடம் சமர்ப்பித்தலும் வேண்டும்; அவர், அதன் மீதான தமது அவதானிப்புகளுடனோ அவையின்றியோ அமைச்சரவைக்கு அதனை அனுப்புதல் வேண்டும்.

*கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் தலைவரை நியமித்தல்.*

**3.** (1) கொள்கை அபிவிருத்தி அலுவலகத்திற்கு தலைவரொருவர் இருத்தல் வேண்டும்; அவர், கொள்கை அபிவிருத்தியிலும் நடைமுறைப்படுத்துதலிலும், விதித்துரைக்கப்பட்டவாறு உயர்தொழில் ரீதியில் தகைமைகொண்டவரும் அனுபவமுடையவருமான ஆளொருவராகவிருத்தல் வேண்டும்.

*(2)* கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் தலைவர் பிரதான நிறைவேற்றலுவலராக இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அலுவலகத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் நிருவகிப்பதற்கும் அவசியமான அத்தகைய எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாதலும் வேண்டும்.

*கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் பணியாட் தொகுதி.*

**4.** *(1)* கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் பணிகளை முறையாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு அவசியமென அமைச்சர் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் அமைச்சர் நியமிக்கலாம்.

*(2)* இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சர்-

(அ) கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் எவரேனும் அலுவலரின்மீது அல்லது சேவையாளரின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம்;

(ஆ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் வேதனங்களை அல்லது சம்பளங்களை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம்; அத்துடன்

(இ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவை நியதிநிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்.

*பகிரங்க அலுவலர்களைக் கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் பணியாட் தொகுதிக்கு நியமித்தல்.*

**5.** *(1)* கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும், அவ்வலுவலர் எந்த அமைச்சினால் அல்லது அமைச்சின்கீழ் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த அமைச்சின் செயலாளரினதும், பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், சொல்லப்பட்ட அலுவலகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்காகக் கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் பணியாட்தொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் சொல்லப்பட்ட அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டத்தின் 14ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டத்தின் 14ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*அமைச்சர் நிமித்த நியமனங் களைச் செய்தல்.*

**6.** (1) அமைச்சர், காலத்துக்குக்காலம், கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவில் சேவை யாற்றுவதற்குக் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக நிமித்த அடிப்படையின்மீது இயைபான துறையில் தமது நிபுணத் துவம் தொடர்பிலும் அனுபவம் தொடர்பிலும் பிரபல்யம் வாய்ந்த ஆட்களின் நியமனங்களைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அத்தகைய நிபுணர்களுக்கு ஏற்புடையற்பாலனவான நியதிநிபந்தனைகளும் அவர்களுக்குச் செலுத்தப்படற்பாலனவான சம்பளங்களும் படியும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக் கப்படுதல் வேண்டும்.

*கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் பணிகள்.*

**7.** (1) கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் பணிகள் பின்வருமாறாதல் வேண்டும்-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, அமைச்சரவை யினால் கவனத்துட் கொள்ளப்படுவதற்காக, பொருளா தார அபிவிருத்தியுட்பட்ட ஏதேனும் விடயத்தின்மீது ஒரு

தேசியக் கொள்கைக்கான வரைவு உத்தேசங்களையும் தேசியக் கொள்கைக் கட்டுக்கோப்பையும் திட்டமிடுதலும், வகுத்தமைத்தலும், அபிவிருத்தி செய்தலும்;

(ஆ) அத்தகைய தேசியக் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில், அவ்வாறு செய்யும்படி அமைச்சரவையினால் தேவைப்படுத்தப்பட்டவிடத்து, ஒருங்கிணைதலும் உதவுதலும், முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தலும், நிறைவேற்றத்தை வசதிப்படுத்துதலும் ஆதாரப் படுத்துதலும்;

(இ) ஏதேனும் பொருளாதார அல்லது சமூகத் துறையினால் எய்தப்பட வேண்டிய எய்தப்படுதகு இலக்குகளை நிர்ணயித்தலும், கிராமிய நவீனமயமாக்கல் மற்றும் கிராமிய நவீனமயமாக்கலின் முன்னேற்றமும் பரிசீலனையும் பற்றித் தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைத்தலுக்காகச் சபைக்கு அறிக்கையிடுதலுட்பட இவ்விலக்குகளை எய்துவதிலான முன்னேற்றத்தைக் கண்காணித்தலும்; அத்துடன்

(ஈ) ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் மற்றும் மாகாண நிருவாகங்களின் செயல்நிறைவேற்றுகை பற்றி சனாதிபதி, பிரதமர் மற்றும் முதலமைச்சருக்கு, அத்தகைய மாகாணத்துக்கு இயைபான கருமம்மீது சுயேட்சையான கருத்தொன்றை வழங்குதல்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில், பின்வருவனவற்றைச் செய்தல் கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் கடமையாதல் வேண்டும் :-

(அ) விடயத்துக்கேற்ப, 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இயைபான பிராந்திய அபிவிருத்திச்சபையை அல்லது கிராமிய நவீனமயமாக்கல் பற்றிய சபையைக் கலந்தாலோசித்தலும்;

(ஆ) உலகளாவிய, பொருளாதார, அரசியல்சார், சமூக மற்றும் சூழல்சார் அபிவிருத்திகளையும் இலங்கைமீது அவற்றின் தாக்கத்தையும் பரிசீலனை செய்தலும்;

(இ) இலங்கையின் உளதாம் கொள்கையை மீள்நோக்கலும் புதிய சவால்களை எதிர்நோக்குவதற்கு அதற்குப் புத்துயிரளிக்கும் நோக்குடன் அதனைத் திறனாய்வு செய்தலும்; அத்துடன்

(ஈ) கொள்கையானது அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கிசையவிருப்பதனை உறுதிப்படுத்துதலும்.

தேசியக் கொள்கை பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல்.

**8.** (1) அமைச்சரானவர், அமைச்சரவைக்கு அதன் அங்கீகாரத்துக்காக ஏதேனும் விடயத்தின்மீது வகுத்தமைக்கப்பட்ட தேசியக் கொள்கையொன்றுக்கான ஏதேனும் வரைவு உத்தேசத்தையும் தேசியக் கொள்கைக் கட்டுக்கோப்பையும் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சரானவர், கொள்கையும் தேசியக் கொள்கை கட்டுக்கோப்பும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுவதன் மேல், அக்கொள்கையையும் கட்டுக்கோப்பையும் பாராளுமன்றத்தின் முன்னர் இடுவித்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், பொருளாதார அபிவிருத்திமீதான தேசியக்கொள்கை, 9ஆம் பிரிவினதும் 10ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தின் முன்னர் இடப்பட்ட விடயத்தின்மீதான தேசியக் கொள்கையை அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடுவித்தல் வேண்டும்.

## அத்தியாயம் 2

## பொருளாதார அபிவிருத்தி

பொருளாதார அபிவிருத்தியின் மீதான தேசியக் கொள்கையின் குறிக்கோள்.

**9.** இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியின் மீதான தேசியக் கொள்கையின் குறிக்கோள், பொருளாதார வளர்ச்சியை எய்துதலாதல் வேண்டும்.

**10.** (1) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திமீதான தேசியக் கொள்கைக் கட்டுக்கோப்பு 9ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள குறிக்கோளைக் கொண்டிருத்தல் வேண்டும். *பொருளாதார அபிவிருத்திக் கான கொள்கைக் கட்டுக்கோப்பு.*

(2) அமைச்சர், காலத்துக்குக்காலம், அத்துடன் அவசியமாகும் போது, கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தைக் கலந்தாலோசித்த பின்னர், தேசியக் கொள்கைக் கட்டுக்கோப்பைத் திருத்துவதற்கான உத்தேசங்களைச் சமர்ப்பிக்கலாம். அத்தகைய ஒவ்வோர் உத்தேசிக்கப்பட்ட திருத்தமும், அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டபின்னர் வலுவுக்குவருதல் வேண்டும்.

(3) தேசியப் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக அரசாங்கத்தின் ஒவ்வொரு திட்டமும், நிகழ்ச்சித்திட்டமும், செயற்திட்டமும், தேசியக் கொள்கைக் கட்டுக்கோப்பிற்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் திட்டம், நிகழ்ச்சித்திட்டம் அல்லது செயற்திட்டம் தேசியக் கொள்கைக் கட்டுக்கோப்புக்கு இசைந்தொழுகுகின்றதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய கொள்கை வழிகாட்டுநெறிகளை அமைச்சர் வழங்கலாம்.

(5) முற்போந்த ஆண்டு தொடர்பில் ஒவ்வோராண்டும் மார்ச்சு முப்பத்தோராந் தேதிக்கு முன்னர் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் மீதான வருடாந்த அறிக்கையொன்றை அமைச்சர் பாராளுமன்றத்தில் இடுதல் வேண்டும்.

**11.** அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் எவரேனும் அலுவலர், எழுத்திலான அறிவித்தல் மூலம், பொருளாதாரக் கொள்கைக் கட்டுக்கோப்பைத் தயாரிப்பதற்காக இயைபானதென அவ்வலுவலர் கருதக் கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படி எவரேனுமாளைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், தகவலின் அத்தகைய வெளிப்படுத்துகை வேறேதேனும் சட்டத்தினால் *தகவல் கோருவதற் கான தத்துவம்.*

அத்தகைய ஆளின்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் கடப்பாட்டை மீறாதிருக்குமிடத்து, அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய அறிவித்தலைப் பெறுகின்ற அத்தகைய ஆளின் கடமையாதலும் வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்புகள்.

**12.** (1) தேசியக் கொள்கைக் கட்டுக்கோப்புக்கிணங்க ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பின்வரும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காகத் துரிதமான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்துக்காக, அமைச்சர், இயைபான மாகாணத்தின் முதலமைச்சரினது கலந்தாலோசனையுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், பொருளாதார அபிவிருத்திக்காக எல்லை வரையறுக்கப்பட்டதும் பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பு என அழைக்கப்படுவதுமான இடப்பரப்பொன்றாக ஏதேனும் இடப்பரப்பைப் பெயர் குறிக்கலாம்:-

(அ) உற்பத்திசெய்தல்;

(ஆ) சுற்றுலாப்பயணத்துறை;

(இ) அறிவியலும் தொழில்நுட்பவியலும்;

(ஈ) ஏற்பாட்டியல்;

(உ) தொழிலும் சேவையும்;

(ஊ) உயர்தொழில்நுட்பக் கடற்றொழில்; அத்துடன்

(எ) உயர்தொழில்நுட்பக் கமத்தொழில்.

அத்தகைய ஒவ்வொரு கட்டளையும், சூழல்சார் மற்றும் நீரியல்சார் ஆய்வுகளுக்கமைய, மற்றவற்றுக்கிடையில் பின்வருவனவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும்-

(அ) அத்தகைய இடப்பரப்பில் கொண்டுநடாத்தப்படக்கூடிய ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகள்;

(ஆ) அத்தகைய செயற்பாடுகளின்மூலம் எய்தப்பட வேண்டிய குறிக்கோள்கள்; அத்துடன்

(இ) அச்செயற்பாடுகளில் உதவுவதற்குத் தேவைப்படுத்தப்பட வேண்டிய அரசாங்க நிறுவனங்கள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக, பாராளுமன்றத்தின் முன்னர் அதன் அங்கீகாரத்துக்காகக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளை, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) உயர்தொழில்நுட்பக் கமத்தொழிலின் அபிவிருத்தியில் உதவுவதற்காகத் தகைமைபெறுவதற்கான ஒவ்வொரு பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பும், பயிர்ச்செய்கை, தயாரிப்பு, உற்பத்தி, களஞ்சியப்படுத்துகை மற்றும் விநியோகிப்பு தொடர்பில் ஆகுசெலவுக்கு உகந்தமையை உறுதிப்படுத்தும் வகையில் அத்தகைய தொகையளவினதைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) உயர்தொழில்நுட்பக் கமத்தொழிலின் அபிவிருத்திக்கான உதவிக்காகத் தகைமை பெறுவதற்குப் பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பிலுள்ள காணி, (1)ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட கமத்தொழிற் செயற்பாடுகளுக்காகப் பிரதானமாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், கமத்தொழில்சாரா நோக்கங்களுக்காக அத்தகைய காணியைப் பயன்படுத்துதலானது மட்டுப்படுத்தவும்படலாம்.

(5) உயர்தொழில்நுட்பக் கடற்றொழிலின் அபிவிருத்திக்கான உதவிக்காகத் தகைமைபெறுவதற்கான ஒவ்வொரு பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பும், கரையோரக் கடற்றொழில், மற்றும் மீன்பண்ணை, கரைகடந்த மீன்பிடித்தல் அத்துடன்

ஆழ்கடல் கடற்றொழிலுக்காகத் துறைமுகங்களை நிர்மாணித்தல், உட்கட்டமைப்புப் பெறுமதி சேர்ப்பு மற்றும் கடற்றொழில் உற்பத்திப்பொருட்களை உற்பத்திசெய்தல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றைத் திட்டமிடுவதிலும் நடை முறைப்படுத்துவதிலும் ஆகுசெலவுக்கு உகந்தமையை உறுதிப் படுத்தும் வகையில் அத்தகைய தொகையளவினைக் கொண்டி ருத்தல் வேண்டும்.

*தேசியத் திட்டமிடற் பேரவைச் சட்டத்தை நீக்குதல்.*

**13**. ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்தாறாம் ஆண்டின் 40ஆம் இலக்க, தேசிய திட்டமிடற் பேரவைச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

## பாகம் II

### அத்தியாயம் 1

### அபிவிருத்திக்கான முகவர் நிலையம்

*அபிவிருத்திக் கான முகவர் நிலையம்.*

**14**. (இதனகத்துப்பின்னர் "முகவர்நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அபிவிருத்திக்கான முகவர்நிலையம் என அழைக் கப்படும் முகவர்நிலையமொன்று இருத்தல்வேண்டும்.

*முகவர் நிலையத்தின் குறிக்கோள்கள்.*

**15**. முகவர்நிலையத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவற்றில் இயைபான அதிகாரிக்கு உதவுவதாகவிருத்தல் வேண்டும்:-

(அ) 10ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தியின்மீதான தேசியக் கொள்கைக் கட்டுக் கோப்பினூடாகப் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டு தலும், விசாலித்தலும், அபிவிருத்தி செய்தலும்;

(ஆ) பின்வரும் நோக்குடன் இலங்கையின் பொருளாதாரத் தளத்தைப் பலப்படுத்துதலும்:-

(i) பொருளாதாரத்தை நவீனமயமாக்குதல்;

(ii) இலங்கைப் பண்டங்கள், உலகளாவிய பெறுமதி இணைப்பினுட் பிரவேசித்து உலகளாவிய சந்தையில் போட்டியிடுவதனை இயலச்செய்தல்;

(iii) இலங்கைப் பண்டங்களினதும் சேவைகளினதும் போட்டித்தன்மையை அதிகரித்தல்;

(iv) சந்தைகளைப் பிறழ்வழிப்படுத்தி வாடகை நாடுவதனைத் தடுக்கும் வகையில் சந்தைப் பங்கினர்களிடையேயான கூட்டுச்சதியைத் தடுத்தல்;

(v) தொழிலைத் தோற்றுவித்தல்;

(vi) ஆட்களின் சொந்த வருமானங்களை அதிகரித்தல்;

(vii) வியாபாரச் சமநிலையைச் சீராக்குதல்;

(viii) பண்டங்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதியை மேம்படுத்துதல்;

(ix) பாவனையாளர் சேமநலத்தை உறுதிப்படுத்துதல்;

(x) சந்தையிடத்தில் நியாயமான போட்டியை உறுதிப்படுத்துதல்;

(xi) உயரிய அம்ச தொழில்நுட்பவியலை ஈடுபடுத்துவதன் மூலம் தொழில்முயற்சிகள் தத்தமது தொழில்நுட்பத் தேர்ச்சிகளையும் தொழில்நுட்பச் செயலறிவையும் தரமுயர்த்துவதற்கு அவற்றை ஊக்குவித்தல்;

(xii) கட்டிட முகாமையும் தொழில்நுட்ப நிபுணத்துவமும்;

(xiii) நிதிக்கான அணுக்கத்தை வழங்குதல்; அத்துடன்

(xiv) குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவைப்பட்ட உட்கட்டமைப்பையும் ஏனைய சேவைகளையும் வழங்குதல்; அத்துடன்

(இ) பொருளாதாரத்தினால் எதிர்நோக்கப்பட்ட போட்டித்தன்மை தொடர்பான முக்கிய பிரச்சினைகள்மீது அறிக்கையிடுதலும் தேவைப்படும் கொள்கை நடவடிக்கையும்.

*முகவர் நிலையத்தின் தத்துவங்களும் பணிகளும்.*

**16.** (1) முகவர் நிலையமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தேசியக் கொள்கைக் கட்டுக்கோப்புக்குப் பயன் கொடுப்பதற்கான வழிகாட்டியாக வரைவுத்திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும், செயற்திட்டங்களையும் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அங்கீகாரத்துக்காக அவற்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்:

ஆயின், கிராமிய நவீனமயமாக்குதல் பற்றிய திட்டங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும், செயற்றிட்டங்களும், அங்கீகாரத்துக்காக 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட சபைக்கு மட்டுமே சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதில் இயைபான பிராந்திய அபிவிருத்திச் சபையைக் கலந்தாலோசிப்பது முகவர் நிலையத்தின் கடமையாதல் வேண்டும்.

(3) அத்தகைய வரைவுத் திட்டங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும், தேவைப்பட்டவிடத்து, 12ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய ஒவ்வொரு பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பும் முகவர்நிலையத்தினால் வலயங்களாகப் பிரிக்கப்படுவதனை உள்ளடக்குதல் வேண்டும்.

(4) முகவர்நிலையமானது, இயைபான பௌதீக அபிவிருத்தித் திட்டமிடல் ஒருப்பாட்டுடன் அத்தகைய வலயங்களுக்காகப் பௌதீக அபிவிருத்தித் திட்டங்களையும் தயாரித்தல் வேண்டும்.

(5) அத்தகைய திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் மாகாண விடயமொன்றாகவுள்ள ஏதேனும் விடயத்துடன் தொடர்பு பட்டவையாக இருக்குமிடத்து, முகவர்நிலையமானது, இயைபான மாகாணசபையின் முதலமைச்சரைக் கலந்தாலோசித்தல் வேண் டும்.

(6) முகவர்நிலையமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக் கமைய,-

(அ) இப்பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும், செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில் இயைபான அதிகாரிக்கு உதவி வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களை யும், செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில், கோரப்படுமிடத்து, ஒருங்கிணைதல் வேண்டும்.

*பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்புகள் தொடர்பில் முகவர் நிலையத்துக்குள்ள தத்துவங்கள்.*

**17**. (1) முகவர் நிலையமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுக ளுக்கிணங்க, இச்சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட பொரு ளாதார அபிவிருத்தி இடப்பரப்புகளின்மீதான தத்துவங்களைப் பிரயோகிப்பதற்குத் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும்.

(2) முகவர் நிலையமானது, அத்தகைய ஏதேனும் இடப்பரப்பை இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட வலயங்களாக எல்லை வரையறுக்கலாமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வலயத் திலும் கொண்டு நடாத்தப்படவேண்டிய செயற்பாடுகளைத் தீர்மானிக்கலாம்.

(3) விதித்துரைக்கப்பட்ட முறையில் முகவர்நிலையத்தினால் உரிமமளிக்கப்படவேண்டிய அத்தகைய தொழிற்படுத்துநர்களி னால் வலயங்கள் முகாமைசெய்யப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பினுள் ஏதேனும் வர்த்தகர் செயற்பாட்டைக் கொண்டு நடாத்துவதற்கு நாடுகின்ற ஏதேனும் தொழில்முயற்சி, அத்தகைய செயற்பாட்டைக் கொண்டுநடாத்துவதற்குத் தம்மை முகவர் நிலையத்திடம் பதிவுசெய்து அதனிடமிருந்து சான்றிதழொன்றைப் பெறுதல் வேண்டும். முகவர்நிலையமானது, வழங்கப்பட்ட அத்தகைய எல்லாச் சான்றிதழ்களும் பற்றிய பதிவேட்டைப் பேணுதல் வேண்டும்.

(5) (அ) ஒரு பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பினுள் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் முயற்சியில் முதலீடுசெய்வதற்கு நாடுகின்ற முதலீட்டாளர்களைப் பதிவுசெய்வதற்கு முகவர்நிலையம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(ஆ) முகவர் நிலையம், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்மூலம், அத்தகைய முதலீட்டாளர்களைப் பதிவு செய்வதற்கான கட்டளைக்கற்களைக் குறித்துரைக்கலாம்.

(6) வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும்,-

(அ) இதன்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்மூலம் எவரேனும் ஆளுக்கு, ஏதேனும் குழுவுக்கு அல்லது அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட, அல்லது அவர்மீது அல்லது அதன்மீது விதிக்கப்பட்ட, அல்லது அவருக்கு அல்லது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் பணிப்புகளை விடுத்தல் முகவர் நிலையத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள், குழு அல்லது அதிகாரசபை, முகவர் நிலையத்தினால் காலத்துக்குக் காலம் அவருக்கு அல்லது அதற்கு விடுக்கப்படக்கூடிய வாறான பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்-

(i) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட முதலீட்டுச் சபை;

(ii) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி அபி விருத்திச்சபை; அத்துடன்

(iii) 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் முகவர் நிலையம்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செயற்திட்டங்களின் பயனுள்ள நடைமுறைப்படுத்துகையை உறுதிப்படுத்து வதற்கு அவசியமென முகவர் நிலையம் கருதக்கூடிய வாறான பணிப்புகளை இதன்கீழ் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு விடுத்தல் அதற்குச் சட்டமுறை யானதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணிப்பு களுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய ஒவ்வொரு நிறுவனத்தினதும் கடமையாதலும் வேண்டும்-

(i) தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்து தல் தொடர்பாக, 2002ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட குடியியல் வான்செலவு அதிகாரசபை;

(ii) தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்து தல் தொடர்பாக, 1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுக அதிகாரசபை;

(iii) 1974ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வழங்கல்,வடிகாலமைப்புச் சபை; அத்துடன்

(iv) 2005ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைச் சுற்றுலாப்பயண மேம்படுத்துகைப் பணியகம்:

ஆயின், 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழான தத்துவம், கடமை அல்லது பணி எதுவும், அச்சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்ட மத்தியசூழல் அதிகாரசபையின் கலந்தாலோசனையுடனும் ஒருப்பாட்டுடனும்தவிர, முகவர் நிலையத்தினால் பிரயோகிக்கப்படுதலோ, புரியப்படுதலோ அல்லது நிறைவேற்றப்படுதலோ ஆகாது.

(7) கமத்தொழிலிலும் கடற்றொழிலிலுமான கிராமிய நவீனமயமாக்கலில் உயர்தொழில்நுட்பவியல்களை ஏற்புடையன வாக்குவதற்கான அபிவிருத்தித் திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும், விதிகளையும் வகுத்தமைக்கும் விடயத்தில், முகவர் நிலையமானது, 21ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட கிராமிய நவீனமயமாக்குதல்மீதான தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைப்பதற்காகச் சபையின் அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

(8) சொல்லப்பட்ட திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விதிகளை நடைமுறைப்படுத்துதலின்மீதான முன்னேற்றம்பற்றி முகவர் நிலையமானது சொல்லப்பட்ட சபைக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

(9) முதலீட்டுச்சபை அத்தகைய ஏதேனும் பொருளாதார அபிவிருத்தி வலயத்தில் ஏதேனும் முயற்சியை அபிவிருத்தி செய்வதற்கு நாடுமிடத்து, அது தொடர்பிலான விண்ணப்பமொன்றை அது முகவர்நிலையத்துக்குச் செய்தல் வேண்டுமென்பதுடன், முகவர்நிலையம் அதன் அங்கீகாரத்தையும் வழங்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய முயற்சி தொடர்பில் முதலீட்டுச் சபையின் தத்துவங்கள், 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறாறிருப்பினும், முகவர் நிலையத்தினால் ஆக்கப்படக்கூடிய எவையேனும் விதிகளுக்கு அல்லது திட்டங்களுக்கு மற்றும் முகவர்நிலையத்தின் மேற்பார்வைக்கும் பணிப்புகளுக்கும் அமைய பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(10) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, அத்தகைய ஏதேனும் பொருளாதார அபிவிருத்தி வலயத்தில் ஏதேனும் முயற்சியை அபிவிருத்திசெய்வதற்கு நாடுமிடத்து, அதுதொடர்பிலான விண்ணப்பமொன்றை அது முகவர் நிலையத்துக்குச் செய்தல் வேண்டுமென்பதுடன், முகவர் நிலையம் அதன் அங்கீகாரத்தையும் வழங்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய முயற்சி தொடர்பில் இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் தத்துவங்கள், 2005ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், முகவர்நிலையத்தினால் ஆக்கப்படக்கூடிய எவையேனும் விதிகளுக்கு அல்லது திட்டங்களுக்கு மற்றும் முகவர்நிலையத்தின் மேற்பார்வைக்கும் பணிப்புகளுக்கும் அமைய பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(11) விடயத்துக்கேற்ப, மாகாண அதிகாரசபைகளுக்கும் முதலீட்டுச் சபைக்கும் அல்லது இலங்கைச் சுற்றுலாப்பயண அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இடையே தோதானவிடத்து, ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துதல் முகவர் நிலையத்துக்குத் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும்.

(12) அமைச்சர், இயைபான விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன், இயைபான தேசியக் கொள்கைமீது விடயத்துக்கேற்ப, முதலீட்டுச் சபைக்கு அல்லது இலங்கைச் சுற்றுலாப் பயண அபிவிருத்திச் சபைக்குப் பணிப்புகள் விடுக்கலாம்.

(13) எந்த இயைபான கருமம் தொடர்பிலான விடயம் வேறோர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் இயைபான கருமம் தொடர்பில் அமைச்சர் ஏதேனும் பணிப்பை விடுக்குமிடத்து, அத்தகைய வேறு அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் அவ்வாறு செய்தல் வேண்டும்.

(14) இரண்டாயிரத்துப்பதினான்காம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்துகைகளின்மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட முதலீட்டாளரொருவருக்கு ஏற்புடையனவாதலாகாது.

முகவர் நிலையத்தின் பணியாட்டொகுதியினரும் பொறுப்புகளும்.

**18.** (1) அமைச்சர் முகவர்நிலையத்தின் முகாமைப் பணிப்பாளரொருவரை நியமித்தல் வேண்டும்; அவர் முகவர் நிலையத்தின் பிரதான நிறைவேற்றலுவலராகவிருத்தலும் அவரது தகைமையும் அனுபவமும், நியமன நியதிநிபந்தனைகளும் விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தலும் வேண்டும். முகாமைப் பணிப்பாளருக்குச் செலுத்தப்படற்பாலதான வேதனாதிகள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) முகவர்நிலையத்தின் பொது அலுவல்கள் பேரவையொன்றிருத்தல் வேண்டும்; அது அபிவிருத்திச் செயல்நுணுக்கம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், முகாமைப் பணிப்பாளர் மற்றும் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட வேறு ஆறு ஆட்களுக்கு மேற்படாதோர் என்போரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பொது அலுவல்கள் பேரவையானது, முகவர்நிலையத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும் நிருவகிப்பதற்கும் பொறுப்பாதல் வேண்டும்.

(4) அபிவிருத்திச் செயல்நுணுக்கம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், பொது அலுவல்கள் பேரவையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். ஒரு கூட்டத்

துக்குச் சொல்லப்பட்ட அமைச்சர் வருகைதராதிருக்கையில், முகாமைப் பணிப்பாளர் கூட்டத்துக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். சொல்லப்பட்ட அமைச்சரும் முகாமைப் பணிப்பாளரும் கூட்டத்துக்கு வருகைதராதவிடத்து, அப்போது, சமுகமளித்துள்ள உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அக்கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(5) முகவர்நிலையத்தின் தத்துவங்களும் பணிகளும், பொது அலுவல்கள் பேரவையின் பணிப்பின்கீழும் கட்டுப்பாட்டின்கீழும் முகாமைப் பணிப்பாளரினால் பிரயோகிக்கப்படுதலும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(6) அபிவிருத்திச் செயல்நுணுக்கம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், ஒழுங்குவிதிமூலம், பொது அலுவல்கள் பேரவையின் பணியாற்றுகை தொடர்பான வேறேதேனும் கருமத்துக்காக விதித்துரைக்கலாம்.

(7) பொது அலுவல்கள் பேரவையினால் மூன்று பணிப்பாளர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்; அவர்களுள் ஒருவர், 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட சபையின் ஒருப்பாட்டுடன் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், கமத்தொழில், கடற்றொழில் மற்றும் முதன்மைக் கைத்தொழில்களின் அபிவிருத்தியில் உதவுவதற்குப் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

(8) முகவர்நிலையமானது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம் என்பதுடன், அவ்வலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் ஏற்புடையற்பாலனவான நியதிநிபந்தனைகளையும் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தையும் தீர்மானிக்கலாம்.

*தத்துவங்களைக் கையளித்தல்.*

**19.** முகவர்நிலையமானது, இயைபான பிராந்திய அபிவிருத்திச் சபைக்கு அதன் தத்துவங்களுள் எவற்றையும் பொதுவாகக் கையளிக்கலாம் அல்லது ஏதேனும் பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்புத் தொடர்பில் குறிப்பாகக் கையளிக்கலாம்.

**20.** ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவிலிருந்து மூன்று மாதங்களினுள் முகவர்நிலையமானது, முற்போந்த ஆண்டின் போது அதன் செயற்பாடுகள் பற்றிய கணக்கைக் கொடுக்கின்ற அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சர் அத்தகைய அறிக்கையைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுவித்தல் வேண்டும். *பாராளுமன்றத்துக்கான வருடாந்த அறிக்கை.*

பாகம் III

### கிராமிய நவீனமயமாக்கல் மீதான சபையைத் தாபித்தல்

**21.** (1) (இச்சட்டத்தில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கிராமிய நவீனமயமாக்கல் மீதான சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:- *கிராமிய நவீனமயமாக்கல் மீதான சபை.*

(அ) சனாதிபதி;

(ஆ) பிரதமர்;

(இ) முறையே நிதி, கிராமியப் பொருளாதாரம், காணி, அபிவிருத்திச் செயல்நுணுக்கங்கள் மற்றும் சர்வதேச வியாபாரம், கைத்தொழில்கள், கமத்தொழில், கடற்றொழில், பெருந்தோட்டத் தொழில்கள் மற்றும் விலங்கு வேளாண்மை என்னும் விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்கள்;

(ஈ) எல்லா மாகாணங்களினதும் முதலமைச்சர்கள்;

(உ) அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வேறு ஏழு உறுப்பினர்கள்;

(ஊ) முகவர் நிலையத்தின் முகாமைப் பணிப்பாளர்; அத்துடன்

(எ) உயர் தொழில்நுட்பக் கமத்தொழில், உயர் தொழில் நுட்பக் கடற்றொழில் மற்றும் முதன்மைக் கைத்தொழில் களுக்காகப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர். அவர் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண் டும்.

(2) ''கிராமிய நவீனமயமாக்கல்'' என்னும் சொல்லமைப்பு, உயர் தொழில்நுட்பக் கமத்தொழில், உயர் தொழில்நுட்பக் கடற்றொழில், சந்தைப்படுத்துதல், தொடுப்புநிலை மற்றும் இயைபான உட்கட்டமைப்பு என்பவற்றை உள்ளடக்கும்.

*கிராமிய நவீன மயமாக்கல் வழிகாட்டு நெறிகள்.*

**22.** பிரிவு 16 (1) இன்கீழ் அங்கீகரிக்கப்பட்ட கிராமிய நவீன மயமாக்கல்மீதான திட்டங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும், செயற் றிட்டங்களும், உயர் தொழில்நுட்பக் கமத்தொழில், உயர் தொழில் நுட்பக் கடற்றொழில் மற்றும் முதன்மைக் கைத்தொழில்கள் என்பவற்றில் கிராமிய நவீனமயமாக்கலுக்கான கொள்கை வழிகாட்டுநெறிகளாக இருத்தல் வேண்டும்.

*கிராமிய நவீன மயமாக்கல் வழிகாட்டு நெறிகள்.*

**23.** (1) சபையானது பின்வருவன தொடர்பில் முகவர் நிலையத் துக்கு வழிகாட்டுநெறிகளை வழங்கலாம்–

(அ) கிராமியப் பொருளாதாரம், உயர் தொழில்நுட்பக் கமத் தொழில், உயர் தொழில்நுட்பக் கடற்றொழில் மற்றும் முதன்மைக் கைத்தொழில்கள் என்பவற்றை நவீன மயமாக்குவதற்கும் பலப்படுத்துவதற்கும் தேவைப்பட்ட வழிமுறைகள் தொடர்பாகவும்;

(ஆ) பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்புகளில் உயர் தொழில்நுட்பக் கமத்தொழில் மற்றும் உயர் தொழில் நுட்பக் கடற்றொழில் தொடர்பிலான முகவர் நிலையத் தின் தத்துவங்கள் அதனால் பிரயோகிக்கப்படுதல் தொடர்பாகவும்;

(இ) கிராமியப் பொருளாதாரம் தொடர்பான செயல்நுணுக் கங்களையும், திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங் களையும் செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்து

வதற்காக முகவர்நிலையத்துக்கும் அரசாங்கத்துக்கும் மாகாண நிருவாகத்துக்கும் இடையே ஒருங்கிணைப்பை வசதிப்படுத்துவதற்கும்.

(2) சபையானது அத்தகைய எல்லாத் திட்டங்களையும், நிகழ்ச் சித்திட்டங்களையும், செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்து வதனைக் கண்காணித்தலும் அவற்றைப் பரிசீலனைசெய்தலும் வேண்டும்.

## பாகம் IV

## பிராந்திய அபிவிருத்தி

### பிராந்திய அபிவிருத்தியின்மீதான தேசியக் கொள்கைக் கட்டுக்கோப்பு

*பொருளாதார அபிவிருத்தித் சபைகளைத் தாபித்தல்.*

**24.** இச்சட்டத்தின் நோக்கத்துக்காகப் பிராந்திய அபிவிருத்திச் சபைகள் தாபிக்கப்படுதல் வேண்டும்-

*பிராந்திய அபிவிருத்திச் சபைகளின் குறிக்கோள்கள்.*

**25.** பிராந்திய அபிவிருத்திச் சபைகளின் குறிக்கோள்கள் பின் வருவனவாதல் வேண்டும்-

(அ) அரசாங்கத்தினதும் மாகாண நிருவாகத்தினதும் திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தலைப் பிராந்திய மட்டத்தில் ஒருங்கிணைத்தலும் அத்தகைய திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் மேற் பார்வையைக் கண்காணித்தலும்; அத்துடன்

(ஆ) முகவர்நிலையத்தினால் வழங்கப்பட்ட முடிபுகளுக்கும் வழிகாட்டுநெறிகளுக்கும் இணங்கத் தனியார்துறை முதலீட்டுக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்து தலை, அவசியமானவிடத்து, வசதிப்படுத்துதல்.

பிராந்திய அபிவிருத்தி மூன்றாண்டுத் தலைமைத் திட்டம்.

**26**. (1) ஒவ்வொரு பிராந்திய அபிவிருத்திச் சபையும், அரசாங் கத்துடனும் மாகாண நிருவாகத்துடனுமான கலந்தாலோசனை யின் பின்னர், 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக அத்தகைய பிராந்தியத்திலுள்ள ஒவ்வொரு நிருவாக மாவட்டத் திலுமான எல்லாத் திட்டங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும், கருத்திட்டங்களும் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) இயைபான பிராந்திய அபிவிருத்திச் சபையானது, அத்தகைய எல்லாத் திட்டங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும், கருத்திட்டங்களும் இட்டுநிரப்புவனவாக இருப்பதனையும் தேசியக் கொள்கைகளுடனும் தேசிய இலக்குகளுடனும் ஒத்திருப்பதனை யும் உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய கலந்தாலோசனை களின்போது எல்லா நடபடிகளையும் எடுத்தல் வேண்டும். அறிக்கைக்கான பிற்சேர்க்கையொன்று, தேசியக் கொள்கை களுக்கும் இலக்குகளுக்கும் இசைந்தொழுகவிராத ஏதேனும் திட்டத்தை, நிகழ்ச்சித்திட்டத்தை அல்லது கருத்திட்டத்தைக் குறிப்பீடுசெய்தல் வேண்டும். இந்நோக்கத்துக்காக, பிராந்திய அபிவிருத்திச் சபைகள், கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் அபிப்பிராயத்தையும் பணிப்பையும் நாடுதல் வேண்டும்.

(3) (அ) பிரிவுகள் 10(3), 18(3), 23(2) மற்றும் 25 என்ப வற்றின்கீழான அறிக்கையினதும் அத்தகைய திட்டங்களினதும் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களினதும் அடிப்படையின்மீது, இயைபான பிராந்திய அபிவிருத்திச் சபை, அவசியமெனக் கருதப்படுகின்ற ஏதேனும் பொருளாதார முன்மதிப்புடன் சேர்த்து, பிராந்தியத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டம் தொடர் பிலுமான எல்லாத் திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் உள்ளடக்குகின்ற மூன்றாண்டுப் பிராந்திய அபிவிருத்தித் தலைமைத்திட்டமொன்றைச் சமர்ப்பித்தல் வேண் டும்.

(ஆ) அறிக்கையானது, அரசாங்கத்தினதும் மாகாண நிருவாகத் தினதும் திட்டங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும், கருத்திட்டங்களும் தொடர்பில், ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டமும் அல்லது கருத்திட்ட மும் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட செலவினம், நிதியளிப் பின் மூலம், சமூக பொருளாதார பெறுமதிகள், சாத்தியக்கூறு என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(இ) தலைமைத்திட்டமானது, 25(ஆ) என்னும் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எல்லாக் கருத்திட்டங்களையும் உள்ளடக்குதலும் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு மாவட்டத் தினுள்ளும் தனியார் தொழில்முயற்சிகள், உயர் தொழில்நுட்பக் கமத்தொழில் மற்றும் உயர் தொழிநுட்பக் கடற்றொழில் என்பவற்றின் வளர்ச்சியை வசதிப்படுத்துவதற்கான வழிமுறை களைத் தலைமைத்திட்டம் விதந்துரைத்தல் வேண்டும். எவையே னும் திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், அல்லது கருத்திட்டங் களைத் தவிர்ப்பதற்கான காரணங்களையும் தலைமைத்திட்டம் கொடுத்தல் வேண்டும்.

(4) அமைச்சரவை இயைபான மாகாணத்தின் முதலமைச் சரைக் கலந்தாலோசித்த பின்னர், திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்களின்றியோ மூன்றாண்டுப் பிராந்திய அபிவிருத்தித் தலைமைத்திட்டத்துக்கான அங்கீகாரத்தை வழங்குதல் வேண் டும். தலைமைத்திட்டம்,25 ஆம் பிரிவுடன் இசைந்தொழுகாத எவையேனும் திட்டங்களை, நிகழ்ச்சித்திட்டங்களை அல்லது கருத்திட்டங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

(5) அமைச்சரவை, காலத்துக்குக் காலம், இயைபான மாகாணத் தின் இயைபான பிராந்திய அபிவிருத்திச் சபையுடனும் முதலமைச்சருடனும் கலந்தாலோசித்த பின்னர் அத்தகைய ஏதேனும் பிராந்திய அபிவிருத்தி தலைமைத்திட்டத்தைத் திருத்த லாம்.

வருடாந்த நடைமுறைப் படுத்தற்றிட்டம்.

**27**. (1) பிராந்திய அபிவிருத்தித் தலைமைத்திட்டத்தை உறுதிப்படுத்தியதன்மேல், இயைபான பிராந்திய அபிவிருத்திச் சபை, ஒவ்வொரு மாவட்டத்திற்குமான வரைவு வருடாந்த நடைமுறைப்படுத்தற்றிட்டமொன்றை வருடாந்தமும், ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள உள்ளூர் பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் எவையேனுமிருப்பின், அவற்றையும் தயாரித்து அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சரவை, இயைபான மாகாணத்தின் முதலமைச்சரைக்

கலந்தாலோசித்த பின்னர், திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்களின்றியோ அத்தகைய வரைவு வருடாந்த நடைமுறைப்படுத்தற்றிட்டத்தையும் உள்ளூர் பொருளாதாரத் திட்டத்தையும் உறுதிப்படுத்தலாம்.

(2) இயைபான பிராந்திய அபிவிருத்திச் சபை, பிராந்திய அபிவிருத்தி தலைமைத்திட்டத்தையும் வருடாந்த நடைமுறைப்படுத்தற்றிட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதில் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புத் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விதிகள்.

**28.** (1) பிரிவுகள் 25, 26 அத்துடன் 27 என்பவற்றின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கான விதிகளை அமைச்சர் ஆக்கலாம் என்பதுடன், அவற்றை வர்த்தமானியில் வெளியிடுதலும் வேண்டும்.

(2) பிரிவுகள் 26 மற்றும் 27 என்பவற்றின் எற்பாடுகளுக்கிணங்க நிறைவேற்றுத் தத்துவத்தை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்குச் சனாதிபதி ஏதேனும் மாகாணத்தின் ஆளுநருக்குப் பணிப்புகள் விடுக்கலாம்.

பிராந்திய அபிவிருத்திச் சபைகளின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்.

**29.** ஏதேனும் பிராந்திய அபிவிருத்திச் சபை, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் கீழானவை தவிர, பின்வரும் தத்துவங்கள், கடமைகள், பயணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பிரயோகிக்கலாம், புரியலாம் மற்றும் நிறைவேற்றலாம்-

(அ) பிராந்திய அபிவிருத்திச் சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் தொழில்நுட்ப மற்றும் நிதிசார் உதவியை உறுதிப்படுத்துதலும் பெறுதலும்;

(ஆ) இயைபான பிராந்தியத்தில் விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பற்றிய ஆய்வுகளை நிறைவேற்றுவதற்காகவும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காகவும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளுதல்;

(இ) இயைபான பிராந்தியத்தில் கொண்டுநடாத்தப்படும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள அரசாங்க அமைச்சுக்களையும், மாகாண நிருவாகத்தையும் நிறுவனங்களையும், மற்றெல்லா முகவர் நிலையங்களையும் அத்தகைய கருத்திட்டங்களைத் திட்டமிடுவதிலும் நடைமுறைப் படுத்துவதிலும் ஒத்துழைக்கும்படி கோருதல்;

(ஈ) இயைபான பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொர்பான ஆராய்ச்சியை நிறை வேற்றுதல்;

(உ) ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை கொள்வனைசெய்து, வைத்திருத்தலும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும்,ஈடுவைத்தலும், அடைமானம் வைத்தலும், விற்பனைசெய்தலும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தலும்; அத்துடன்

(ஊ) அரசியலமைப்பினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, பிராந்திய அபிவிருத்திச் சபையின் குறிக்கோள்களை எய்துவதன் அல்லது இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதன் இடைநேர்விளைவாகவிருக்கக் கூடிய வாறான அல்லது உகந்தனவாகவிருக்கக் கூடியனவா றான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் செய் தல்.

பிராந்திய அபிவிருத்திச் சபைகள் நிதிகளைக் குறித்தொதுக்கு தல்.

**30.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் பிராந்திய அபிவிருத்திச் சபை, அதன் பணிகளுள் எவற்றையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அமைச்சரின் அங்கீகாரத்துடன், ஏதேனும் பகிரங்க கூட்டுத் தாபனத்துக்கு அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துக்கு நிதிகளைக் குறித்தொதுக்கலாமென்பதுடன், 34(4) ஆம் பிரிவின் நியதிகளின்படி விடுக்கப்பட்ட எவையேனும் பணிப்புகளின்கீழ் சொல்லப்பட்ட பணிகளை நிறைவேற்றுதலும் அத்தகைய பணியை நிறைவேற்றுவதில் உறப்பட்ட செலவினத்துக்

காகக் கணக்குக் காட்டுதலும், விடயத்துக்கேற்ப, அத்தகைய கூட்டுத்தாபனத்தின் அல்லது திணைக்களத்தின் கடமையாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் பிராந்திய அபிவிருத்திச் சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் எந்தக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது திணைக் களத்துக்கு நிதிகள் குறித்தொதுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஏதே னும் கூட்டுத்தாபனத்தை அல்லது திணைக்களத்தை, அத்தகைய நிதிகளின் செலவினம் தொடர்பில் பிராந்திய அபிவிருத்திச் சபையினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்துவதற்கு உரித் துடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தேவைப்பாட் டுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் அல்லது திணைக்களத்தின் கடமையாதலும் வேண்டும்.

பிராந்திய அபிவிருத்திச் சபைகளினால் பணியாட் டொகுதியினர் நியமிக்கப் படுதல்.

**31.** (1) ஒவ்வொரு பிராந்திய அபிவிருத்திச் சபையும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகவிருக்கக்கூடிய வாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாமென்பதுடன், அவர்களுக்குச் செலுத்தப்படற்பால தான ஊதியத்தையும் தீர்மானிக்கலாம். **48** ஆம் பிரிவின் ஏற்பாடு கள், ஏற்றமாற்றங்களுடன், அலுவலர்களினதும் சேவையாளர்க ளினதும் நியமனங்களுக்கும் அவைதொடர்பாகவும், தோதான வாறு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம், ஒவ்வொரு பிராந்திய அபிவிருத்திச் சபையினாலும், விடயத்துக்கேற்ப, நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அல்லது ஒருங்கிணைக்கப்படவேண்டிய கருத்திட்டங்களையும் செயற் திட்டங்களையும் குறுத்துரைக்கலாம்.

(3) ஒவ்வொரு பிராந்திய அபிவிருத்திச் சபையும், முகவர் நிலையத்தின் பணிப்பின்கீழ், முகவர்நிலையத்தினால் காலத்துக்காலம் அதற்கு வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய

கொள்கைப் பணிப்புகளுக்கிணங்க அதன் அதிகார இடப் பரப்பினுள் அடங்குகின்ற ஏதேனும் அபிவிருத்தி இடப்பரப்புக் காக அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களை யும் மற்றும் செயற்திட்டங்களையும் நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன், முகவர்நிலையத்தினால் அதற்குக் கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தத்துவங்களையும் பிரயோகிக்கலாம்.

(4) பிராந்திய அபிவிருத்திச் சபைகள், அமைச்சரினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய திட்டங்களை யும்,நிகழ்ச்சித்திட்டங்களையும்,செயற்திட்டங்களையும் அல்லது கருத்திட்டங்களையும் ஒருங்கிணைப்பதற்கும் பணிப்பதற்கும் பொறுப்பானவையாதல் வேண்டும்.

(5) முகவர்நிலையமானது பின்வருவன தொடர்பிலான அதன் தத்துவங்களுள் எவற்றையும் கையளிக்கலாம்:-

(அ) ஏதேனும் பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பு;

(ஆ) ஏதேனும் பிராந்திய அபிவிருத்திச் சபைக்கு, அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய வேறு கருமங்கள். அத்தகைய ஏதேனும் தத்துவத்தை கையளித்தல் அத்தகைய தத்துவத்தை நேரடியாகப் பிரயோகிப்பதற்கு முகவர் நிலையத்துக்குள்ள உரிமையைப் பாதித்தலாகாது.

அபிவிருத்திச் சபைகளினால் பிரயோகிக்கப் படவேண்டிய தத்துவங்கள்.

**32.** பிரிவுகள் 24, 25, 26, 27, 29, 30 மற்றும் 31 என்ப வற்றின்கீழான தத்துவங்கள், தெற்கு அபிவிருத்திச் சபை, வயம்ப அபிவிருத்திச்சபை, மத்திய அபிவிருத்திச்சபை, கிழக்கு அபிவிருத்திச்சபை மற்றும் வடக்கு அபிவிருத்திச் சபை என்பவற் றினால் அதன் ஒவ்வோர் அதிகார இடப்பரப்புத் தொடர்பிலும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### அத்தியாயம் 1

### தெற்கு அபிவிருத்திச் சபை

தெற்கு அபிவிருத்திச் சபை.

**33.** (1) தெற்குப் பிராந்தியத்துக்கான பிராந்திய அபிவிருத்திச் சபை, தெற்கு அபிவிருத்திச் சபை எனவழைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் அதிகார இடப்பரப்பு, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனறாகலை மற்றும் இரத்தினபுரி நிருவாக மாவட்டங்களாக இருத்தலும் வேண்டும்.

(2) தெற்கு அபிவிருத்திச் சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டிய தெற்குப் பிராந்திய அபிவிருத்திக்கான நிருவாகி; அவர் தெற்கு அபிவிருத்திச் சபையின் தவிசாளராகவும் பிரதான நிறைவேற்றலுவலராகவும் இருத்தல் வேண்டும்;

(ஆ) முறையே தெற்கு மாகாணசபையின், சப்பிரகமுவ மாகாணசபையின் மற்றும் ஊவா மகாணசபையின் பிரதான செயலாளர்கள்;

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான நியதிச்சட்ட முறையான சபையின் அல்லது கூட்டுத்தாபனத்தின் அத்தகைய வேறு பகிரங்க அலுவலர்கள் அல்லது தவிசாளர்; அத்துடன்

(ஈ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட வேறு மூன்று ஆட்கள்.

(3) அமைச்சர், தெற்குப் பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சராக இருத்தல் வேண்டும்.

(4) தெற்குப் பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், காலத்துக்காலம், எழுத்திலான அறிவுறுத்தல்களைத் தெற்கு அபிவிருத்திச் சபைக்கு விடுவிக்கலாம்.

(5) தெற்குப் பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், தெற்குப் பிராந்திய அபிவிருத்திக்கான நிருவாகியின் பணிகளைக் குறித்துரைக்கலாம்.

(6) தெற்கு அபிவிருத்திச் சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பகிரங்க அலுவலர்களையும் சேவையாளர்களையும் தெற்கு அபிவிருத்திச் சபை நியமிக்கலாம்.

அத்தியாயம் 2

## வயம்ப அபிவிருத்திச் சபை

வயம்ப அபிவிருத்திச் சபை.

**34.** (1) வயம்பப் பிராந்தியத்துக்கான பிராந்திய அபிவிருத்திச் சபை, வயம்ப அபிவிருத்திச் சபை எனவழைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் அதிகார இடப்பரப்பு, புத்தளம், குருநாகல் மற்றும் கேகாலை நிருவாக மாவட்டங்களாகவிருத்தலும் வேண்டும்.

(2) வயம்ப அபிவிருத்திச்சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தவிசாளரும் மூன்று உறுப்பினர்களும்;

(ஆ) வயம்ப மாகாணசபையின் பிரதான செயலாளர்;

(இ) சப்பிரகமுவ மாகாணசபையின் பிரதான செயலாளர்; அத்துடன்

(ஈ) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு பகிரங்க அலுவலர்கள்.

(3) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட வயம்ப அபிவிருத்திச் செயலகத்தின் பணிப்பாளர், சபையின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(4) வயம்ப அபிவிருத்திச் சபையின் தவிசாளர், வயம்ப அபிவிருத்திச் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக விருத்தல் வேண்டும்.

(5) அமைச்சரானவர் வயம்ப பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சராக இருத்தல் வேண்டும்.

(6) வயம்ப பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், காலத்துக்காலம், வயம்ப அபிவிருத்திச் சபைக்கு எழுத்திலான அறிவுறுத்துதல்களை விடுக்கலாம்.

(7) வயம்ப அபிவிருத்திச் சபையின் பணிகளை நிறை வேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பகிரங்க அலுவலர்களையும் சேவையாளர்களையும் வயம்ப அபிவிருத்திச் சபை நியமிக்கலாம். வயம்ப அபிவிருத்திச் சபையானது, பணிப் பாளருக்கும் தவிசாளருக்கும் அது கையளிக்கக்கூடிய தத்துவங் கள் பற்றி முடிபுசெய்தல் வேண்டும்.

அத்தியாயம் 3

## மத்திய அபிவிருத்திச் சபை

**35.** (1) மத்திய பிராந்தியத்துக்கான பிராந்திய அபிவிருத்திச் சபை, மத்திய அபிவிருத்திச் சபையென அழைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் அதிகார இடப்பரப்பு, அநுராத புரம், பொலன்னறுவை, மாத்தளை, கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை நிருவாக மாவட்டங்களாக இருத்தலும் வேண்டும். *மத்திய அபிவிருத்திச் சபை.*

(2) மத்திய அபிவிருத்திச் சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்–

(அ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்; அவர்களுள் ஒருவர், தவிசாளராக அவரினால் பெயர் குறிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) மத்திய, வடமத்திய மற்றும் ஊவா மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்;

(இ) மத்திய அபிவிருத்திச் செயலகத்தின் பணிப்பாளர்;

(ஈ) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பகிரங்க அலுவலர்கள்.

(3) மத்திய அபிவிருத்திச் சபையின் தவிசாளர், மத்திய அபிவிருத்திச் சபையின் பிரதான நிறைவேற்றலுவலராக இருத்தல் வேண்டும்.

(4) அமைச்சரானவர், மத்திய பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சராக இருத்தல் வேண்டும்.

(5) மத்திய பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், காலத்துக்காலம், மத்திய அபிவிருத்திச்சபைக்கு எழுத்திலான அறிவுறுத்தல்களை விடுவிக்கலாம்.

(6) மத்திய அபிவிருத்திச் சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பகிரங்க அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

## அத்தியாயம் 4

## கிழக்கு அபிவிருத்தி சபை

*கிழக்கு அபிவிருத்திச் சபை.*

36. (1) கிழக்குப் பிராந்தியத்துக்கான பிராந்திய அபிவிருத்திச் சபை, கிழக்கு அபிவிருத்திச் சபை எனவழைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் அதிகார இடப்பரப்பு, திருகோண மலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை நிருவாக மாவட்டங் களாக விருத்தலும் வேண்டும்.

(2) கிழக்கு அபிவிருத்திச் சபை, பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர் கள்; அவர்களுள் ஒருவர், தவிசாளராக அவரினால் பெயர் குறிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கிழக்கு மாகாணசபையின் பிரதான செயலாளர்;

(இ) கிழக்கு அபிவிருத்திச் செயலகத்தின் பணிப்பாளர்;

(ஈ) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பகிரங்க அலுவலர்கள்.

(3) கிழக்கு அபிவருத்திச் சபையின் தவிசாளர், கிழக்கு அபிவிருத்திச் சபையின் பிரதான நிறைவேற்றலுவலராக இருத் தல் வேண்டும்.

(4) அமைச்சர், கிழக்குப் பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(5) கிழக்குப் பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், காலத்துக்காலம், கிழக்கு அபிவிருத்திச்சபைக்கு எழுத்தில் அறிவுறுத்தல்களை விடுவிக்க லாம்.

(6) கிழக்கு அபிவிருத்திச்சபையின் பணிகளை நிறைவேற்று வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பகிரங்க அலுவலர்களையும் சேவையாளர்களையும் கிழக்கு அபிவிருத்திச் சபை நியமிக்கலாம்.

## அத்தியாயம் 5

## வடக்கு அபிவிருத்திச் சபை

வடக்கு அபிவிருத்திச் சபை.

**37.** (1) வடக்குப் பிராந்தியத்துக்கான பிராந்திய அபிவிருத்திச் சபை, வடக்கு அபிவிருத்திச் சபை எனவழைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் அதிகார இடப்பரப்பு, யாழ்ப் பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு நிருவாக மாவட்டங்களாக இருத்தலும் வேண்டும்.

(2) வடக்கு அபிவிருத்திச் சபை பின்வரும் ஆட்களைக் கொண் டிருத்தல் வேண்டும்.

(அ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர் கள், அவர்களுள் ஒருவர் தவிசாளராக அவரினால் பெயர்குறிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) வடக்கு மாகாணத்தின் முதலமைச்சரினால் நியமிக்கப் பட்ட இரு உறுப்பினர்கள்; அவர்களுள் ஒருவர் பிரதித் தவிசாளராக அவரினால் பெயர்குறிக்கப்படுதல் வேண் டும்;

(இ) வடக்கு மாகாணசபையின் பிரதான செயலாளர்;

(ஈ) மீளக்குடியமர்த்துதல் அதிகாரசபையின் தவிசாளர்; அத்துடன்

(உ) வேறெவரேனும் பகிரங்க அலுவலர் அல்லது அவசிய மெனக் கருதப்படுகின்றவாறு ஒரு கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச்சட்டமுறையான நிறுவனத்தின் அலு வலர்.

(3) வடக்கு அபிவிருத்திச் சபையின் தவிசாளர், வடக்கு அபிவிருத்திச் சபையின் பிரதான நிறைவேற்றலுவலராதல் வேண்டும்.

(4) அமைச்சரானவர் வடக்கு பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சராதல் வேண்டும்.

(5) வடக்குப் பிராந்திய அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், காலத்துக்காலம், வடக்கு அபிவிருத்திச் சபைக்கு எழுத்திலான அறிவுறுத்துதல்களை விடுக்கலாம்.

(6) வடக்கு அபிவிருத்திச் சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு பகிரங்க அலுவலர்களையும் சேவையாளர்களையும் வடக்கு அபிவிருத்திச் சபை நியமிக்கலாம்.

பிரதான குறிக்கோள்கள்.

**38.** வடக்கு அபிவிருத்திச் சபையின் குறிக்கோள்கள், மற்றவற்றுக்கிடையில், வடக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த பொருளாதாரத்தை மீள உயிர்ப்பித்தலும் மீள நிலைநாட்டுதலுமாக இருத்தல் வேண்டும்.

## பாகம் VI

### சர்வதேச வியாபாரத்துக்கான முகவர்நிலையம்

சர்வதேச வியாபாரத்துக்கான முகவர் நிலையம்.

**39.** சர்வதேச வியாபாரத்துக்கான முகவர்நிலையம் என வழைக்கப்படவேண்டிய முகவர்நிலையமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

சபையின் அமைப்பு.

**40.** சர்வதேச வியாபாரத்துக்கான முகவர்நிலையத்தின் நிருவாகமும் முகாமையும் (இப்பாகத்தில் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) சபையொன்றுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) வர்த்தகப் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஆ) இறக்குமதிகள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர்;

(இ) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தவிசாளர்;

(ஈ) தேயிலைச் சபையின் தவிசாளர்;

(உ) கூட்டு ஆடை ஏற்றுமதியாளர்கள் சம்மேளனத்தின் தவிசாளர்;

(ஊ) வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினது பிரதிநிதியொருவர்;

(எ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினது பிரதிநிதியொருவர்; அத்துடன்

(ஏ) கூட்டு ஆடை ஏற்றுமதியாளர்கள் சம்மேளனத்தின் பிரதிநிதியொருவர்; அத்துடன்

(ஐ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட வேறு ஆறு உறுப்பினர்கள்; அவர்களுள் ஒருவர் சபையின் தவிசாளராக அவரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும். அத்தகைய கூட்டமெதற்கும் தவிசாளர் வருகை தராதவிடத்து, வருகை தந்துள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சபையின் ஓர் உறுப்பினர் கூட்டத்தில் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் நான்காதல் வேண்டும்.

**41.** (1) சர்வதேச வியாபாரத்துக்கான முகவர்நிலையத்திற்கு முகாமைப் பணிப்பாளரொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்; அவரது தகைமையும் அனுபவமும், நியமன நியதிநிபந்தனைகளும் விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும். முகாமைப் பணிப்பாளருக்குச் செலுத்தப்படற்பாலதான வேதனாதிகள் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். முகாமைப் பணிப்பாளர் சபையின் முடிபுகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், சர்வதேச வியாபாரத்துக்கான முகவர் நிலையத்தின் பணியாட்டொகுதியினரின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் வேண்டும்.

*முகாமைப் பணியாளரும் பணியாட்டொகுதியினரும்.*

(2) சர்வதேச வியாபாரத்துக்கான முகவர் நிலையத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் சபையானது நியமிக்கலாம்.

**42.** (1) சர்வதேச வியாபாரத்துக்கான முகவர்நிலையத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

*சர்வதேச வியாபாரத்துக்கான முகவர் நிலையத்தின் குறிக்கோள்களும் பணிகளும்.*

(அ) இலங்கையின் சர்வதேச வியாபாரத்தை மேம்படுத்தலும் அபிவிருத்திசெய்தலும்;

(ஆ) இலங்கை உற்பத்திப்பொருட்களினதும் சேவைகளினதும், குறிப்பாக கமத்தொழில் மற்றும் கடற்றொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளினது வளர்ச்சியை வசதிப்படுத்துதல்;

(இ) இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாரிய வியாபார, தொழில் மற்றும் ஏற்பாட்டியல்சார் மையமாக இலங்கையை மேம்படுத்துதல்; அத்துடன்

(ஈ) இலங்கையின் சர்வதேச வியாபாரத்தை வகுத்தமைப்பதற்காகவும், நடைமுறைப்படுத்துவதற்காகவும், ஒருங்கிணைப்பதற்காகவும் கூடல் முகவர்நிலையமாகச் சேவையாற்றுதல்.

(2) சர்வதேச வியாபாரத்துக்கான முகவர்நிலையமானது, அதன் பணிகளைப் பிரயோகிக்கையில், சர்வதேச வியாபாரத்தின் மீதான தேசியக் கொள்கையையும் இயைபான அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும், செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும் என்பதுடன், பின்வருவனவற்றையும் செய்யலாம்-

(அ) இலங்கையின் சர்வதேச வியாபாரத்தின் வளர்ச்சிக்கு உகந்தான தொழில் மற்றும் ஒழுங்குபடுத்தல் சூழலை உருவாக்குதலை மேம்படுத்தலாம்;

(ஆ) (i) சர்வதேச சந்தைகளினுள் இலங்கைப் பண்டங்களும் சேவைகளும் பிரவேசிப்பதனை வசதிப்படுத்துவதற்கும்;

(ii) பொதுவாக இலங்கைப் பண்டங்களுக்காகவும், குறிப்பாகக் கைத்தொழில், கமத்தொழில் மற்றும் கடற்றொழில் உற்பத்திப் பொருட்களுக்காகவும், சேவைகளுக்காகவும் சர்வதேச சந்தைகளில் ஒப்புரவான நடாத்துகையை உறுதிப்படுத்துவற்கும், ஆன வழிமுறைகளை விதந்துரைக்கலாம்;

(இ) இலங்கைப் பண்டங்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை விதந்துரைக்கலாம்;

(ஈ) இலங்கையின் சர்வதேச வியாபாரத்தை வசதிப்படுத்துகின்ற நோக்குடன், அரசாங்கத்தின் இறக்குமதி, ஏற்றுமதிக் கொள்கைகளுக்கான மாற்றங்களை அவசியமானவிடத்து விதந்துரைக்கலாம்;

(உ) இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையேயான வியாபாரத்தின் போது எழுகின்ற புலமைச் சொத்துப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கான வழி முறைகளை விதந்துரைக்கலாம்; அத்துடன்

(ஊ) உலக வியாபார ஒழுங்கமைப்பில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தலாம்.

(3) சர்வதேச வியாபாரத்துக்கான முகவர் நிலையத்தின் பணிகளை நிறைவேற்றும் நோக்கங்கள் தொடர்பாக, அமைச்சர், பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளைச் சபைக்கு விடுக்கலாம் என்பதுடன் சபை அப்பணிப்புகளுடன் இணங்கி ஒழுகுதலும் வேண்டும்.

*பணிப்புகளை விடுப்பதற்கான தத்துவம்.*

**43.** (1) சர்வதேச வியாபாரத்துக்கான முகவர் நிலையத்தின் பணிகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக, சபையானது, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, வர்த்தகத் திணைக்களம், இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், இலங்கைத் தேயிலைச் சபை மற்றும் சர்வதேச வியாபாரம் தொடர்பான பணிகளைக் கொண்டுள்ள வேறேதேனும் திணைக்களம் அல்லது நிறுவனம் என்பவற்றுக்குப் பணிப்புகள் விடுப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய திணைக்களம் அல்லது நிறுவனம் அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும், -

(அ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவினால் இலங்கை முதலீட்டுச் சபைக்கும்; அத்துடன்

(ஆ) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கும்,

அளிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களும் பணிகளும் சர்வதேச வியாபாரத்துக்கான முகவர் நிலையத்தி னால் பிரயோகிக்கப்படுதலும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும், மற்றும் விடயத்துக்கேற்ப, இலங்கை முதலீட்டுச் சபையினால் அல்லது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் அல்ல.

(3) சர்வதேச வியாபாரத்துக்கான முகவர் நிலையம், அது குறித் துரைக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய-

(அ) இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழானவையும் (2)ஆம் உட்பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்டவை யுமான) அதன் தத்துவங்களுள் மற்றும் பணிகளுள் எவற்றையும் இலங்கை முதலீட்டுச் சபைக்கும்; அத்து டன்

(ஆ) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழானவையும் (2) ஆம் உட்பிரிவினால் அதற்கு உரித்தாக்கப்பட்டவையுமான) அதன் தத்துவங்களுள் எவற்றையும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கும்,

கையளிக்கலாம்.

(4) வர்த்தகத் திணைக்களம், பல்புடை மற்றும் பிராந்திய வியாபாரமும் வியாபாரப் பொருட்களும் பற்றிய பேரப்பேச்சுக் களை நடாத்துவதில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சபையினால் விடுக்கப்பட்ட எல்லாப் பணிப்புரைகளுக்குமிணங்கச் செயலாற் றுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

**44**. இப்பாகத்தில் ''அமைச்சர்'' என்பது, அபிவிருத்திச் செயல்நுணுக்கங்களும் சர்வதேச வியாபாரமும் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் என்று பொருளா கும்.

## பாகம் VII

### நிறைவேற்றலுவலர்களின் ஒன்றுகூடல்

*நிறைவேற்று அலுவலர்களின் ஒன்று கூடல்.*

**45**. இச்சட்டத்தின்கீழான திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்றிட்டங்களும் கருத்திட்டங்களும் பற்றிக் கலந்துரையாடுவதற்கு, சனாதிபதியானவர், அமைச்சரவை, மாகாணங்களின் முதலமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக்களின் தவிசாளர்கள் என்போரின் மாநாட்டை வருடாந்தம் அழைக்கலாம்.

## பாகம் VIII

### குறித்தசில சட்டங்களின் ஏற்புடைமை

*நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினதும் மகாவலி அபிவிருத்திச் சட்டத்தினதும் ஏற்புடைமை.*

**46**. (1) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும், 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, இலங்கை நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை நகர அபிவிருத்தி அதிகாரசபையானது -

(அ) இச்சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட எவையேனும் திட்டங்களை, நிகழ்ச்சித்திட்டங்களை அல்லது செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனைப் பங்கமான முறையில் பாதிக்கும் அத்தகைய முறையில் அச்சட்டத்தின் பிரிவுகள் 8அ, 8இ, 8ஈ, 8உ, 8ஊ, 8ஏ மற்றும் 8ஓ என்பவற்றின் கீழான அதன் தத்துவங்களைப் பிரயோகித்தலாகாது;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பொன்று தொடர்பில் அச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களை, அச்சட்டத்தில் முரணாகவுள்ள ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், முகவர் நிலையத்தினால் அதற்கு வழங்கப்படக்கூடிய

வாறான அத்தகைய பணிப்புக்களுக்கிணங்கப் பிரயோகித்தல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும், 1979ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மகாவலி அதிகாரசபையானது -

(அ) இச்சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களை, நிகழ்ச்சித்திட்டங்களை அல்லது செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனை பங்கமான முறையில் பாதிக்கும் அத்தகைய முறையில் அச்சட்டத்தின் பிரிவுகள் 22, 23, 24 மற்றும் 25 என்பவற்றின் கீழான அதன் தத்துவங்களைப் பிரயோகித்தலாகாது;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பொன்று தொடர்பில் அச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களை, அச் சட்டத்தில் முரணாகவுள்ள ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், முகவர் நிலையத்தினால் அதற்கு வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புக் களுக்கிணங்கப் பிரயோகித்தல் வேண்டும்.

இலங்கைச் சுற்றுலாப் பயண அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கைத் தேயிலைச் சபை மற்றும் சர்வதேச வியாபாரத்துக் கான முகவர் நிலையம் என்பன, பணிப்புரை களுக்கு அமைந்தொழுகு தல்.

**47**. (1) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும், இலங்கைச் சுற்றுலாப்பயண அபிவிருத்தி அதிகாரசபை, இச்சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற் திட்டங்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட எவையேனும் திட்டங்களை, நிகழ்ச்சித் திட்டங்களை அல்லது செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனைப் பங்கமான முறையில் பாதிக்கும் அத்தகைய முறையில் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களைப் பிரயோகித்தலுமாகாது.

(2) இலங்கைச் சுற்றுலாப்பயண அபிவிருத்தி அதிகார சபையானது, சொல்லப்பட்ட திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங் களையும், செயற் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு

முகவர் நிலையத்தினால் வழங்கப்பட்ட எல்லாப் பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) இலங்கைத் தேயிலைச் சபையானது, சர்வதேச வியாபாரத்துக்கான முகவர்நிலையத்தினால் வழங்கப்பட்ட திட்டங்களுக்கும் பணிப்புரைகளுக்கும் அமைய அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(4) சர்வதேச வியாபாரத்துக்கான முகவர்நிலையம், முகவர் நிலையத்தின் முடிபுகளுக்கு இணங்கியொழுகுதலும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும் வேண்டும்.

## பாகம் IX

### பொது

*பகிரங்க அலுவலர்களை மாற்றுச் சேவைக்கு அமர்த்துதல்.*

**48.** (1) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு முகவர் நிலையத்தின், சபையின் அல்லது வேறு நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அத்தகைய முகவர் நிலையத்தினால், சபையினால் அல்லது வேறு நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு, ஒரு பிராந்திய அபிவிருத்திச் சபை அல்லது வேறு நிறுவனம் உட்பட, அத்தகைய முகவர் நிலையத்தின் அல்லது சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலரொருவர், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டவொரு முகவர் நிலையத்துக்கு, சபைக்கு அல்லது வேறு நிறுவனத்துக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின்

14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலரொருவர் இச்சட்டத் தின்கீழ் தாபிக்கப்பட்ட முகவர் நிலையம், சபை அல்லது வேறு நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் ஏற்புடைமை.

**49**. இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட ஒவ்வொரு முகவர் நிலையமும், சபையும் அல்லது வேறு நிறுவனமும் இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்களும் அலுவலர்களும் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்.

**50**. இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட ஒவ்வொரு முகவர் நிலையத்தினதும், சபையினதும் அல்லது வேறு நிறுவனத்தினதும் உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக் குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர் களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்குக்கான பாதுகாப்பு.

**51**. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் முகவர் நிலையத்தினால், சபையினால் அல்லது வேறு நிறுவனத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அத்தகைய முகவர் நிலையத் துக்கு, சபைக்கு அல்லது வேறு நிறுவனத் துக்கு எதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது விடயத்துக்கேற்ப, அத்தகைய முகவர் நிலையம், சபை அல்லது

வேறு நிறுவனத்தின் பணிப்பின்மீது, அத்தகைய முகவர்நிலையத்தின், சபையின் அல்லது வேறு நிறுவனத்தின் எவரேனும் உறுப்பினரினால், அலுவலரினால், சேவையாளரினால் அல்லது முகவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக, வழக்கு அல்லது குற்ற வழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர், முகவர் நிலையம், சபை அல்லது வேறு நிறுவனத்தினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்ற வழக்கில் அம் முகவர் நிலையம், சபை அல்லது வேறு நிறுவனத்தினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் முகவர் நிலையத்துக்கு, சபைக்கு அல்லது வேறு நிறுவனத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுத் தொகை, சொல்லப்பட்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் முகவர் நிலையம், சபை அல்லது வேறு நிறுவனத்தின் பணிப்பின்மீது (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய எவரேனுமாளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய வழக்கில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**52.** *(1)* இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்கு பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

*(2)* குறிப்பாகவும் *(1)*ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர், காலத்துக்குக்காலம், பின்வருவனவற்றுக்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் கருமத்தை விதித்துரைக்கின்றவையும்; அத்துடன்

(ஆ) பின்வரும் நோக்கங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் உசிதமானவையெனத் தோன்றக் கூடியவாறானவையும் :-

(i) இச்சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும், செயற்திட்டங்களையும் வகுத்தமைப்பதனை வசதிப்படுத்துவதற்காகவும்;

(ii) தாமதங்களையும் நிருவாகத் தடைகளையும் ஒழிப்பதற்காகவும் தனியொரு குறிநிலையில் முதலீட்டு அங்கீகாரங்களை வசதிப்படுத்துவதற்காகவும்;

(iii) சட்டத்தினால் வழங்கப்பட்ட வரி ஊக்குவிப்புக்களை அதிகரிப்பதற்கான கட்டளைக்கற்கள், நடவடிக்கைமுறை மற்றும் அதிகாரத்தைக் குறித்துரைப்பதற்காகவும்;

(iv) கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் சட்ட அந்தஸ்து மற்றும் அதன் பணியாட்டொகுதியினரின் நியமனம், ஊதியம் மற்றும் தகைமைகள் உட்பட, அது தொடர்பான கருமங்களுக்காகவும்; அத்துடன்

(v) இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்களுக்காக அல்லது விடயங்களுக்காக ஒழுங்குவிதிகள் ஆக்கப் படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின் றதோ பொதுவாக அக்கருமங்களின் அல்லது விடயங்களின் இடைநேர்விளைவான அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங் களுக்காகவும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டு தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்கு விதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி ஏதேனும் துணைநிலைச் சட்டவாக்கத்துடன் ஒவ்வாததாகக் காணப்படுமிடத்து, அவ்வொழுங்குவிதியானது, அத்தகைய ஒவ்வாமையின் அளவுக்கு மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானஅளவு விரைவாக, அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

**53.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய -

''அமைச்சர்'' என்பது, இச்சட்டத்தின் பாகம் VI இன் நோக்கங்களுக்காகத் தவிர, தேசிய கொள்கை மற்றும்

பொருளாதார அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் என்று பொருளாகு மென்பதுடன் பாகம் VI இன் நோக்கத்துக்காக "அமைச்சர்" என்பது, செயல்நுணுக்கங்கள் மற்றும் சர்வதேச வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சர் என்று பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப் பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

"செயலாளர்" என்பது, தேசியக் கொள்கை மற்றும் பொரு ளாதார அலுவல்கள் என்னும் விடயம் குறித்தொதுக் கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் என்று பொருளாகும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**54.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*